**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 53/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.5** |
| Name | : | **சதீஸ்குமார் (காவல் ஆய்வாளர்)** |
| Father's / Husband Name | : | |
| Address | : | |
| Age | : | 41/2026 |

**தேதி : 04.03.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டம் நங்கவரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.08.2024ம் தேதி 12.00 மணிக்கு பெரம்பலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோத உதவி ஆய்வாளர் ராம்குமார் அவர்கள் பதிவு செய்திருந்த குற்ற எண். 661/2024 சட்டப்பிரிவுகள் 309 (4) BNS ன் கீழ் பதிவு செய்திருந்த வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணி, பாலுசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான பழனிசாமி, சுரேஷ், பாலுசாமி, மணி ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். சம்பவ உண்மை என தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில்

31.08.2024ம் தேதி 19.30 மணிக்கு பெரம்பலூர் காவல் நிலையம் அருகே நின்றுக்கொண்டிருந்தவரை காரணம் கூறி கைது செய்தபோது தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாலமுருகன், ராஜா ஆகிடியோர் முன்னிலையில் பதிவு செய்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற எதிரியான ராஜூவ் (எ) டால்டா கண்ணன் என்பவரை 10.01.2025ம் தேதி 10.00 மணிக்கு பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தவரை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் எதிரிகளுக்கு எதிராக எனது இறுதி விசாரணை முடித்து அதே சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்ன தேதி, சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சென்று மாதிரி வரைபடம், பார்வைமகசர் தயார செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால சரியல்ல. எதிரிககள் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.